# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 26 திங்கட்கிழமை 08.04.2024 கதிர் 153


## சாந்தனின் நினைவாக யாழ். நகரில் நிகழ்வு



மறைந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் (சாந்தன்) நினைவுகளுடன்நினைவு நாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

'சாந்தன் ஏன் சந்தனமானார்?' எனும் தொனிப்பொருளில்யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வாருந்தினர் மண்டபம் ஒன்றில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சாந்தனின் உருவப் படத்திற்கு ☞ 8

## நிரந்தர அரசியல் தீர்வு வரை தமிழ் அரசுக் கட்சி போராடும்

### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழ் அரசுக்கட்சிபோராடும்என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மக்களின்வரிப்பணத்தில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு திருப்தி அளிக்காதவிடத்து வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பொன்னாவெளி மக்கள் விரட்டியடித்ததைப் போன்ற நிலை கிழக்கில் உள்ள அமைச்சர்களுக்கும் நடக்கும். மக்களால் ☞ 2

## நாமல் ஜனாதிபதி வேட்பாளராக இன்னமும் காலம் உள்ளது

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் எமது தரப்பின் சார்பில் சிறந்த வேட்பாளரை களமிறக்குவோம். ஜனாதிபதி தேர்தலில்போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும்காலமுள்ளது என முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

சில சமயங்களில் விபத்துக்கள் நடந்தால்தொடர்ந்துநடக்கும்.அதுவும் ஒரே மாதிரியான விபத்துக்கள் அடுத்தடுத்து நடக்கும். ஹயஸ் வாகனங்கள் மோதுதல், தொடருந்து மோதுதல் என்று தொடர்ச்சியாக விபத்துக்கள் நிகழ்ந்து அதில் பலர் உயிரிழப்புக்களையும் சந்திப்பர். அதுபோன்று இது கட்சிகளின் வழக்குக்காலம்போலும். ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சி வழக்கை எதிர்கொண்டுள்ளது. தெற்கில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் வழக்கை எதிர்கொண்டுள்ளது. இப்போதுதமிழர் விடுதலைக் கூட்டணியும் வழக்கை எதிர்கொண்டுள்ளது.

தமிழ் விடுதலைக் கூட்டணி ஒரு காலத்தில் தமிழர்களின் அரசியல் அடையாளமாகத் திகழ்ந்தது. தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை சேர்ந்து உருவாக்கியதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி. அந்தக் கூட்டணி இருந்த வரையில் தமிழ் அரசுக் கட்சி செயல் இழந்திருந்தது. செயற்பாடுகள் இன்றி அதனை முடக்கி வைத்திருந்தார்கள். ☞ 2

## நெத்தலியாற்றில் கள்ள மண் அகழ்வு



முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான மையப்பகுதியில் உள்ள கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாற்றில் களவாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தமது விவசாயத்தை அழித்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறை வைத்து காலபோகமும் சிறுபோகமும் செய்து வரும் விவசாயிகளின் இந்தக் கள்ள மண் அகழ்வால் பாதிக்கப்பட்டுள்ளனர். மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸார் ☞ 8

# சஜித் பிரேமதாஸவை ஒரு பிடிபிடித்த ரணில்

### கட்சித் தொண்டர்கள் மத்தியில் தாறுமாறாக விமர்சனம்

சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி ஐக்கிய மக்கள்சக்தியைகட்டியெழுப்பினார். அவரது தந்தையின் ஆட்சியில் கட்சி பிளவுபட்டபோது கட்சியைப் பாதுகாத்தவன்நான்என்றவகையில் இன்று கட்சி பிளவுபட்டதற்காக வருந்துகின்றேன் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் ☞ 2

## "ஒருபோதும் பின்வாங்கமாட்டோம்" மைத்திரி தொண்டர்களிடம் சூளுரை

சுதந்திரக் கட்சிக்கு எவ்வாறான நெருக்கடிகளை ஏற்படுத்தினாலும் நாங்கள் ஒருபோதும்பின்வாங்கப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடுவலவில் இடம்பெற்ற சிறீ லங்கா சுதந்தர கட்சியின் மாவட்டசம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சி வரலாற்றில் பல தடவைகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. அப்போது எமக்கு ஏற்பட்ட சவால்களை முறியடித்துக்கொண்டு கட்சியை முன்னுக்கு கொண்டு செல்ல நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அதேபோன்று தற்போதும் கட்சிக்கு எதிராக பல்வேறு சவால்கள், எதிரான நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த சவால்களை வெற்றி கொள்ள நாங்கள் நடவ டிக்கை எடுப்போம்.

குறிப்பாக கட்சியின் செயலாளர் என்னை அடிப்படையாகக் கொண்டு வழக்கு தொடுத்திருக்கிறார். ☞ 2

## மலைநாட்டுக் கலைகளை காத்துப்பேண நடவடிக்கை

### குழு நியமிக்கப்படும் என ஜனாதிபதி அறிவிப்பு

மலைநாட்டு நடனக் கலையைப் பாதுகாத்து, தொடர்ந்துபேணுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயக் குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

கலாசார அலுவல்கள் அமைச்சு, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திநியமிக்கப்படும் இந்தக் குழுவில் கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக் கொள்ள ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மலைநாட்டு கலை மையமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் ☞ 9

## மின் நிலையம் அமைக்க நெடுந்தீவிலும் பூமி பூசை



யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள மூன்று தீவுகளில் மீள்புதுப்பிக்கத்தக்க ஒருங்கிணைந்த மின்சார உற்பத்தித் திட்டத்தின் கீழ்நெடுந்தீவில்அமைக்கப்படவுள்ள மின் ☞ 2

## பெரமுனவின் உள்ளாட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பு

பொது ஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில்ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பொது ஜன பெரமுன உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுக் கலந்துகொண்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் ஆளும்தரப்பின்வேலைத் திட்டம் குறித்து மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில்கிராமங்களை ஒன்றிணைத்து முன்னாள் உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் அங்கத்துவத்துடன் ஆலோசனை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு தெரிவித்தார்.

இதன்படி கிராமங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு நேரடியாக அறிவிக்கும் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படும் ☞ 2

## கண்ணிவெடி அற்ற நாடாக 2028இல் இலங்கை மாறும்

### அமைச்சர் பிசன்ன ரணதுங்க தெரிவிப்பு

2028ஆம் ஆண்டளவில் இலங்கையை கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடிகுண்டுகள் இல்லாத நாடாக நாங்கள் மாற்றுவோம் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தேசிய கண்ணிவெடி அகற்றும் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் சுமார் 23 கிலோ மீற்றர் நீளமான பகுதியிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டி உள்ளன. கண்ணிவெடிகள் இருந்த முழு நிலத்திலிருந்து 1லட்சத்து 34 ஆயிரத்து 87 கிலோ மீற்றர் நிலப் பகுதியில் கண்ணிவெடிகள்முற்றாக அகற்றப்பட்டுள்ளன. அதிலிருந்து 24 லட்சத்து 92 ஆ0ரத்து 81 கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதன் மூலம் பொதுமக்களின் எதிர்காலப் பாதுகாப்பு குறித்து ஆளும் தரப்புக் கவனம் செலுத்தியுள்ளது. உலக கண்ணிவெடிகள் ☞ 2

## இனி இது .....

கூட்டணி உருவாக்கப்பட்டுச் சிறிது காலத்திலேயே அது தமிழர்களுக்கு என்று தனிநாடு வேண்டும் என்ற பரப்புரையில் ஈடுபட்டு வட்டுக்கோட்டையில் தீர்மானமும் நிறைவேற்றியது. 1977 பொதுத் தேர்தலையும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தே வடக்குகிழக்கில் அதுபோட்டியிட்டது. இந்தக் கோரிக்கையால் மிரண்டு போன தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் இந்தக் கூட்டணி அரசியல் சரிவராது என்று பிரிந்து மீண்டும் தனிதே அரசியல் செய்யச் சென்றுவிட்டார்.

அதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கான போராட்ட சக்தியாக, அரசியல் அடையாளமாகத் திகழத்தொடங்கியது. நீண்டகாலமாக அந்தநிலை நீடித்தது. முதன்முதலில் தமிழீழ விடுதலைப் புலிகளினது ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில்தான் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்றது. அப்போது கூட்டணியின் தலைமைப்பதவியில் இருந்தவர் வீ.ஆனந்தசங்கரி. இருந்தாலும் கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தனையே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அடையாளம் காட்டினார்.

அத்தகைய தொரு பின்னணியில், ஒரு கட்டத்தில் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு அது முற்றியது. அதன்விளைவாக அடுத்த பொதுத் தேர்தலில் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தை கூட்டமைப்புப் பயன்படுத்த முடியாமல் ஆனந்தசங்கரி வழக்குத் தாக்கல் செய்தார். அத்துடன் கட்சியையும் தனது உடமையாக்கிக்கொண்டார். அது முதல் தமிழ் அரசியல் பரப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும் துரோகிகளாக அடையாளப்படுத்தப்பட்டனர். தேர்தல்களில் தொடர்ந்து தோற்கடிக்கப்பட்டனர். இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி என்றால் என்னவென்றே தெரியாத ஒரு தலைமுறை வாக்காளர்கள் உருவாகிவிட்டார்கள்.

இப்படி வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட கூட்டணியைப் பாழாக்கிய வரலாற்றுப் பழியைச் சுமந்து நிற்பவர் ஆனந்தசங்கரி. மூத்த அரசியல்வாதியான இவர் சம்பந்தனின் வயதை ஒத்தவர். 90 வயதை நெருங்கிவிட்ட அவர் மூப்பின் காரணமாக நன்றாகத் தளர்ந்துவிட்டார். அதனால் கட்சி நிர்வாகத்தை ஒருவழியாக புதியவர்களிடம் கையளித்துள்ளார். அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு ஊடக அறிக்கையில் கட்சியின் தலைவராக அருண் தம்பிமுத்து தெரிவாகி இருப்பதுடன் புதிய நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் கட்சியின் மத்திய குழுக் கூட்டமும் வவுனியாவில் நடத்தப்பட்டிருக்கின்றது.

இந்த மத்திய குழுக் கூட்டத்தையும் புதிய நிர்வாகத் தெரிவையும் எதிர்த்து வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக கட்சியின் மகளிர் பேரவைத் தலைவியும் மத்திய குழு உறுப்பினருமான சூரிய பிரதீபா அறிவித்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அண்மையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

கட்சியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் என்ற போர்வையில் சிலர் கட்சிக்குள் புகுந்துள்ளனர், அவர்களின் உண்மையான நோக்கம் கட்சியை அபகரித்துச் செல்வதே என்று அவர் குற்றஞ்சாட்டினார். கட்சி யாப்புக்கு எதிராகவே புதிய நிர்வாகத் தெரிவும் மத்திய குழுக் கூட்டமும் இடம்பெற்றதாகத் தெரிவித்தே இந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது பழைய யாப்புக்களை மீட்டெடுக்கும் காலம் போலும், அதுதான் எல்லோரும் யாப்புக்களைத் தூசுதட்டி எடுத்து வழக்குப் போட்டுக் கொண்டிருககிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இன்று நாம் ஒரு வித்தியாசமான அரசியல் சூழலில் இங்கு கூடியுள்ளோம். 2022 இல் நாட்டின் பொருளாதாரம் மட்டுமன்றி அரசியல் கட்சி முறைமையும் உடைந்தது. எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்றி மக்களை உயிர்ப்பிப்பதே இன்றைய நமது முதன்மையான பொறுப்பாகும்.

இந்த பொருளாதார நெருக்கடியை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்திலிருந்தே அடையாளங் கண்டிருந்தது. இந்த பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள 3 பில்லியன் டொலர்கள் தேவை என்று 2020 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிதான் அறிவித்திருந்தது. ஆனால் ஒரு குழு ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து சஜித் பிரேமதாசவுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியது.

சஜித்தின் தந்தையின் ஆட்சியில் கட்சி பிளவுபடும் போது கட்சியை காத்தவன் நான் என்ற வகையில் அது தொடர்பில் வருத்தமடைகிறேன். இந்தக் கட்சியை உடையவிடாமல் நாம் முன்னேறியிருந்தால் இன்று அரசியல் ரீதியாக பலமான கட்சியாக இருந்திருப்போம். எங்களுக்கு ஆட்சி அமைக்க வாய்ப்பு இருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவியைக் கைவிட்ட போது தங்களால் இதனைச் செய்ய முடியாது எனவும் முடியுமான தரப்பினருக்கு ஆதரவளிப்போம் என்றும் கூறினார்கள். அந்தச் சமயம் அவர்களின் ஆதரவு தேவைப்பட்டது. கட்சி பிளவுபட்டதன் காரணமாக இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதியினர் எதிர்க்கட்சியில் உள்ளனர். மேலும், நான் பிரதமராக பதவியேற்றதும் எனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று மீண்டும் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அந்த ஆதரவு கிடைக்கவில்லை.

அதன் பின்னர் இந்த நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. பிரதமராக இருந்த நான் ஜனாதிபதிப் பதவியை ஏற்கவிருந்தேன். ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதிப் பதவியை விரும்புவதால் எதிர்க்கட்சித் தலைவரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று கூறினார்கள். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கே நாட்டின் ஜனாதிபதி பதவியை வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பொது ஜன பெரமுனவில் இருந்து வெளியேறிய சிலருடன் இணைந்து பிரதமராக வர முயன்றார் சஜித்.

நாட்டின் நெருக்கடியான வேளையில் பிரதமருக்குச் சந்தர்ப்பம் கொடுப்போம் என்று மொட்டுக் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்கள் கூறினார்கள். ஆனால் மொட்டுக் கட்சியினர் மொட்டு உறுப்பினருக்குத் தான் ஆதரவு வழங்க வேண்டும் என்ற பொதுஜன பெரமுன தலைவர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். அதன் பிறகு, அவர் உட்பட ஒரு சிறு குழுவினர் எதிர்க்கட்சிக்குச் சென்றனர். ஜனாதிபதி தெரிவுக்கு மொட்டுக் கட்சி வேட்பாளரை நியமிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். பின்னர் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும நிறுத்தப்பட்டார். அப்போது சஜித் பிரேமதாச பிரதமராக வருவதற்கு தயாராக இருந்தார். ஆனால் முதலில் பிரதமர் பதவியை ஏற்க முடியாது என்று ஒடியிருந்தார்.

எப்படியோ நான் ஜனாதிபதியானேன். அரசியலைப் பற்றி சிந்திக்காமல், நாட்டைப் பற்றி சிந்தித்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரினேன். எப்படியோ எல்லோரும் இணைந்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம். மொட்டுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கிராமங்களில் ஒன்றுக்கொன்று எதிராகச் செயற்பட்ட குழுக்கள். ஆனால் நாங்கள் நாட்டுக்காக ஒன்றுபட்டோம். தற்போது நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்முடன்தான் இருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தி அன்று கூறியது. சிறிகொத்த மாத்திரம் தான் எம்மிடம் இல்லை என்றார்கள். எமக்கு அதிகாரத்தை தாருங்கள் சிறிகொத்தவை கைப்பற்றுவோம் என ஐக்கிய மக்கள் சக்தி கூறியது. ஆனால் தற்போது ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட மொட்டுக் குழுவுடன் கூட்டணி அமைத்துள்ளனர்.

இன்று சஜித்துடன் ரஞ்சித் மத்துமபண்டார மட்டுமே அமர்ந்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வேறு யாரும் அங்கு இல்லை. இன்றைய ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் இல்லை. அப்படியானால் இன்று அவர்களை ஐக்கிய தேசியக் கட்சி என்று அழைக்க முடியாது. கடந்த தேர்தலில் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சி தங்களிடம் இருப்பதாக கூறினார்கள்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஒருபகுதியினர் அவர்களுக்கு வாக்களித்தனர். இப்போது ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட மொட்டுக் கட்சியினரிடம் ஐக்கிய மக்கள் சக்தி சரணடைந்துள்ள நிலையில், அதனை ஐக்கிய தேசியக் கட்சி என்று எப்படி சொல்ல முடியும். அதனால் கிராமங்களில் ஐ.தே.கவினர் ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஏமாந்துள்ளனர். அவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சுற்றி அணிதிரள வேண்டும்.

ஜே.ஆர் ஜயவர்தனவுடன் பணியாற்றி, ஜனாதிபதி பிரேமதாசவுடன் கட்சியைப் பாதுகாத்து, பின்னர் டி.பி.விஜேதுங்கவை ஜனாதிபதியாக்கி அதே கட்சியின் பிரதமரான பின்னர், நான் நாட்டின் தலைவராக தெரிவானேன். அப்படிப்பட்ட ஒரு தலைமுறை கொள்கைப் பாரம்பரியத்துடன் தான் நான் முன்னோக்கி வந்தேன். ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க சிலர் முயற்சித்தனர். எனவே ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க வாக்களித்த இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நாம் ஐக்கிய தேசியக் கட்சியாக இணைந்து செயற்பட வேண்டும். அதற்காக கிராமதிலுள்ள கட்சித் தொண்டர்களை ஒன்று சேர்க்க வேண்டும்.

இக்கட்டான நேரத்தில் நாட்டைக் காப்பாற்ற கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்தோம். மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து கொண்டதாகச் சிலர் குற்றம் சுமத்துகின்றனர். பொது ஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் எனக்கு ஆதரவளிக்க உடன்பட்டார்கள். அப்போது மஹிந்த ராஜபக்ச பெரும்பான்மையுடன் இணைய வேண்டியதாயிற்று. ஆனால் கட்சித் தலைவர் பெரும்பான்மைக்கு எதிராகச் செயல்பட்டார். இங்கே வெறுப்புத்தான் இருக்கிறது. கொள்கைகள் அல்ல. ஆனால் எங்களுக்குள் வெறுப்பு இல்லை. நாட்டை அபிவிருத்தி செய்யவே விரும்புகிறோம்.

இன்றுள்ள நாட்டின் பொருளாதார நிலை அன்று இருக்கவில்லை. இன்று அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமை கிடைத்துள்ளது. பொருளாதார ரீதியில் நாளுக்கு நாள் முன்னேறி வருகிறோம். அதற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவோம். இன்று நாம் ஆரம்பித்துள்ள அஸ்வெசும மற்றும் உறுமய வேலைத் திட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் உள்ளன. எனவே, இந்தத் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் அவர்களிடம் இல்லாத காரணத்தினால் அவர்கள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள் கைகள் டி.எஸ். சேனநாயக்காவின் கட்சியில்தான் இருக்கிறது. அந்தக் கட்சியை ஏற்றுக்கொள்ளுங்கள். ஜே.ஆர். ஜயவர்தனவின் நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்றுக் கொள் ளுங்கள். அத்தோடு 1989ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாசவின் ஆளும்தரப்பை பாதுகாத்தவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியில்தான் இருக்கிறார்கள் என்ற செய்தியை கிராமத்திலுள்ள கட்சித் தொண்டர் களுக்கு எடுத்துக் கூறுங்கள் என் றார்.

## பெரமுனவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் தரப்பின் 'அஸ்வெசும' வேலைத்திட்டம் மற்றும் 'உறுமய' காணி உறுதி வேலைத் திட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றுமாறு முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்த ஜனாதிபதி, தேவையானவசதிகளைக் செய்து தருவோம் என்றார்.

அத்துடன், ஆளும் தரப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைபடுத்துவதற்கு முன்னோடிகளாக உள்ளூராட்சி பிரதேசங்களில் உள்ள இளைஞர்களை முன்னோக்கி கொண்டு வர வேண்டியது அவசியமாகும் என்றார்.

## ஒருபோதும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீதிமன்றம் சென்று என்னை கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி இருக்கிறார். ஏப்ரல் 18 வரை நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்திருக்கிறது.

இந்தச் சவால்கள் அனைத்துக்கும் நாங்கள முகம் கொடுப்போம். எமது நியாயத்தன்மையை நீதிமன்றில் சமர்ப்பிப்போம். நீதிமன்றம் பக்கச் சார்பற்ற தீர்ப்பொன்றை வழங்கும் என நாங்கள் நம்புகிறோம். அதன் பிரகாரம் இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு, எம்முடன் கூட்டணி அமைக்க ஒன்றுபட்டுள்ள அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாங்கள் எதிர்வரும் தேர்தலில் பலம்மிக்க கட்சியாக முன்வருவோம்.

சுதந்திரக் கட்சி வரலாறு பூராகவும் விழுந்து விழுந்து மீள எழும்பிய கட்சியாகும். அதனால் யார் என்ன சொன்னாலும் எங்களுக்கு எவ்வாறான நெருக்கடிகளை ஏற்படுத்தினாலும் நாங்கள் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. நாங்கள் தொடர்ந்தும் முன்னுக்கு செல்வோம் என்றார்.

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் ஏப்ரல் 4 கடைப்பிடிக்கப்படுவதோடு, அந்த நிகழ்வில் 'தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம்' மூலம் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கண்ணிவெடி அகற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நட்புறவை வளர்க்கும் வகையில் கிரிக்கெட் போட்டியும் பெண்களுக்கான கயிறு இழுக்கும் போட்டியும் இடம்பெற்றது.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பயிற்சியளிக்கப்பட்ட நாய்களின் விஷேட செயல்விளக்கம் மற்றும் கண்ணிவெடி அகற்றும் உபகரணங்களை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களால் அவதானிக்கப்பட்டது.

கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நிறைவடைந்துள்ள நிலையில், இங்கு பணிபுரியும் 3000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கும் விசேட வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது உரையில் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு முதல் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டுக்குள் இயங்கி வந்ததுடன், 2010ஆம் ஆண்டு 'தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம்' தொடங்கப்பட்டது.

கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கிய இந்த நிலையம் தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் இயங்குகிறது. இது கண்ணிவெடி அகற்றும் முகவர் நிறுவனங்களை ஒருங்கிணைத்து வழிநடத்தி மற்றும் மேற்பார்வை செய்கிறது.

இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நேரடிப் பங்களிப்பை வழங்குகிறது மற்றும் அது இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவின் ஊடாகச் செய்யப்படுகிறது.

ஹலோ ட்ரஸ்ட் (HeloTrust) மற்றும் மக் (Mag) ஆகிய இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் டாஷ் (Dash) மற்றும் ஷாவ் (SHAF) ஆகிய இரண்டு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான தரைத்தள அகற்றல் பிரிவுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. மற்ற 4 அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்த திட்டத்திற்கு ஆதரவை வழங்கும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வழங்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய ஆளும்தரப்பு வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க பல விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களும் நிம்மதியாக இலங்கையர்களாக வாழவேண்டும் என்பதே ஆளும்தரப்பின் விருப்பம். அதனைச் சீர்குலைக்க முயற்சிக்கும் வடக்கு அல்லது தெற்கில் உள்ள இனவாத மதவாத அமைப்புக்களோ அல்லது தனி நபர்களோ ஏமாற வேண்டாம் என்றார்.

## மின் நிலையம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி நிலையத்திற்கான பூமி பூசை நேற்று இடம் பெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் நெடுந்தீவில் சூரிய ஒளி மின்சாரம் மற்றும் காற்றாலை மூலமாக ஒருங்கிணைந்த மின் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை அரசுக்குமம் இந்திய நிறுவனத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி இலங்கை மின்சார சபைக்காக இந்த மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தத்திட்டத்தின் கீழ் அனலைதீவில் நிறுவப்படவுள்ள ஒருங்கிணைந்த மின் உற்பத்தி நிலையத்திற்கான பூமி பூசை கடந்த வாரம் அனலைதீவில் செய்யப்பட்டது.

மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கவுள்ள இந்திய நிறுவனத்தின் மின் பொறியியலாளர் தினேஷ் பாண்டியன் முன்னிலையில் நெடுந்தீவில் பூமிபூசை இடம்பெற்றது.

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களும் வெகுவிரைவில் துரத்தியடிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட திக்கோடை கிராமத்தில் நேசக் கரங்கள் சமூக நல அமைப்பின் சாதனையாளர் பாராட்டு விழா சனிக்கிழமை அறிவொளி கல்வி நிலையத்தில் அமைப்பின் தலைவர் ந.கதிர வன் தலைமையில் நடை பெற்றது.

அங்கு உரையாற்றிய சாணக்கியன் தெரிவித் ததாவது:

இந்த நாட்டிலே வாழ முடியாத அளவிற்கு விலைவாசிகள் அதிகரித்துள்ளன. செலவுகள் அதிகரித்துள்ளன. இதனால் தற்காலத்தில் கிராமங்களிலுள்ள இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகளிலே தொழிலுக்காகச் சென்றுள்ளனர். எதிர்காலத்தில் தேர்தல்கள் வரும்போது அதில் மக்கள் தீர்க்கமான முடிவெடுக்கும்போது, மாற்றங்களை நாம் கொண்டுவரலாம். ஜனாதிபதித் தேர்தலிலே சாணக்கியன் எம்.பியை போட்டியிட வைக்கலாமே என சிங்களசகோதரர் வினவியதாக அதிபர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

இந்த நாட்டிலே ஜனாதிபதித் தேர்தல் வருவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலிலே பேரம் பேசுவதற்காக பலர் அணி அணியாக சேர்ந்துகொண்டு செல்கின்றார்கள். கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தாலதாம் பேரம்பேசும் சக்தியாக திகழலாம் என ஸ்ரீலங்கா

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# கொக்குவில் நாமகள் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி





கொக்குவில் நாமகள் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டிகள் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் முதல்வர் லயன் ஜெ.ரஜீவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சுவீதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட அதேவேளை சிறப்பு விருந்தினர்களாக லயன் கலாநிதி சோ. பாலகுமாரும் லயன் ரொனிகஜனும் கௌரவ விருந்தினர்களாக நேதாஜி சனசமூக நிலையத் தலைவர் கு.மதன், விக்கி லேனேர்ஸ் உரிமையாளர் சு.விக்கினேஸ்வரன், இணுவில் முருகஜீவ அறக்கட்டளையைச் சேர்ந்த மு.புவீஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(05)

# சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் விவசாய உயர் டிப்ளோமா இப்தார் நிகழ்வு

(தில்சாத் பர்வீஸ்)



சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியின் விவசாய உயர் டிப்ளோமா கற்கைநெறி பயிலும் மாணவர்களால் நிந்தவூர் கடற்கரையில் சனிக்கிழமை இஃப்தார் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியின் மாணவர்களில் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் விவசாய உயர் டிப்ளோமா அனைத்து மாணவர்களும் சேர்ந்து இந்த நிகழ்வை நடத்தத் தீர்மானித்து இருந்தோம். ஆனால் சில மாணவர்கள் கலந்து கொள்ள முடியாமல் காணப்பட்டமையால் இந்த நிகழ்வை மிகவும் சிறியதாக நடத்தி இருக்கிறோம் எதிர்காலத்தில் அனைத்து மாணவர்களும் ஒன்று சேர்ந்து இதனை ஒரு பெரிய நிகழ்வாக நடத்தத் தீர்மானித்துள்ளோம் எனக் கூறினார். (05)

# திருமலை திருக்கோனேஸ்வர ஆலயத்தில் ஆச்சரியப்பட வைத்த வெளிநாட்டவர்கள்



வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரம் அருள் மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சம் நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சலத்தின் போது வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருவர் இந்து மத கலாசார உடையுடன் வருகை தந்து பக்தியுடன் சாமி தூக்கினர்.

சுவாமி வீதி உலா வரும் போது அவர்கள் சுவாமியை தூக்கியுள்ளனர். வெளிநாட்டவர்கள் இவ்வாறு சுவாமி தூக்கும் நிகழ்வை அங்குள்ளவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பஸ் – மோ.சைக்கிள் மோதி நிந்தவூரில் முதியவர் சாவு

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியிலுள்ள நிந்தவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாட்டுபாளையம் பகுதியில் பஸ் மோட்டார்சைக்கிளில் மோதியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளதோடு, பஸ் சாரதியை கைது செய்துள்ளதாக நிந்தவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நிந்தவூர் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த 72 வயதுடைய அகமட் லெப்பை மீராலெப்பை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நிந்தவூர் மாட்டு பாளையம் சந்திக்கு அருகில் சனிக்கிழமை பகல் 11.30 மணியளவில் பொத்துவில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த தனியார் பஸ் - மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற வயோதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நிந்தவூர் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் பஸ் சாரதியைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் அவர் கூறுகையில் -

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் விவசாய பிரிவின் தலைவர் எஸ்.ரவீந்திரன், சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்று சென்றுள்ளார். இதனால் விவசாய டிப்ளோமா கற்கை நெறி அழிந்து போகும் அபாயத்தில் காணப்படுகிறது. அதனை அழிந்து போகாமல் எதிர்காலத்தில் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் வரும் மாணவர்கள் பயன் பெற வேண்டும் என்பதுக்காக விவசாய பிரிவைக் கட்டி எழுப்ப எங்களால் முடியும் என சுட்டிக்காட்டினார்.

இதன் போது சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியின் பழைய மற்றும் கல்வி கற்கும் விவசாய டிப்ளோமா மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# ரயில் விபத்தில் ஒருவர் காயம் வவுனியாவில் சம்பவம்






வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

குறித்த விபத்து தொடர்பாக தெரியவருகையில் -

அனுராதபுரத்திலிருத்து யாழ். நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, கடவையைக் கடக்கமுற்பட்ட கப் வாகனத்துடன் மோதியதில் மேற்படி விபத்து இடம்பெற்றது.

விபத்தில் கப் வாகனம் கடுமையான சேதமடைந்ததுடன் அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தில் ரயிலின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது. இதனையடுத்து பயணிகள் இறக்கப்பட்டு மற்றொஷரு புகையிரதத்தில் ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை குறித்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் சிலவருடங்களுக்கு முன்பு இடம்பெற்ற விபத்தில் நான்குபேர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05-100)

# பாடசாலை மாணவர்களுக்குப் போதைப் பொருள் விற்பனை செய்த இருவர் முல்லேரியாவில் கைது

முல்லேரியா பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்குப் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18 மற்றும் 24 வயதுடைய இளைஞர்களாவர்.

இவர்கள் முல்லேரியா பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்கு அருகில் உள்ள சிகை அலங்கார நிலையம் ஒன்றுக்குள் வைத்து போதைப்பொருள் விற்பனை செய்துவந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகளவிலான பாடசாலை மாணவர்கள் இந்த சிகை அலங்கார நிலையத்திலிருந்து போதைப்பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையான வீரர்கள் மதிக்கப்படவேண்டும்

அவலம் நிறைந்த போரின் மிகப்பெரும் எச்சங்களில் ஒன்றாக இருக்கும் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிப்பொருட்கள் இல்லாத நாடாக 2028இல் இலங்கை மாறும் என்கிற நம்பிக்கையான செய்தி வந்திருக்கின்றது. போர் முடிந்து 15 ஆண்டுகளானபோதும் கண்ணிவெடிகள் இன்னும் அகற்றி முடிக்கப்படவில்லை என்பது துரதிர்ஸ்டமே. அதற்கு மிக நீண்ட காலம் பிடிக்கும் என்று அந்தப் பணிகளைத் தொடக்கும்போதே கணிக்கப்பட்டது. அதுபோன்றே கிட்டத்தட்ட 20 ஆண்டுகளை அந்த பணிகள் தின்று தீர்த்திருக்கின்றன.

வடக்குகிழக்கில் இன்னும் சுமார் 23 கிலோமீற்றர் நீளமான பகுதியிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டி உள்ளன என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கிறார். உலக கண்ணிவெடிகள் தினத்தையொட்டி கிளிநொச்சியில் நடந்த நிகழ்வில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் கண்ணிவெடிகள் இருந்த முழு நிலத்திலிருந்து 1 லட்சத்து 34 ஆயிரத்து 87 கிலோ மீற்றர் நிலப் பகுதியில் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. அதிலிருந்து 24 லட்சத்து 92 ஆயிரத்து 81 கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. கண்ணிவெடிகளை அகற்றுவது மிகப் பெரிய மனிதாபிமான நடவடிக்கையாக இருந்தது. அது பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கையைப் பிரகாசமாக்கியுளளது. அந்த வகையில் அது போற்றப்படவேண்டியதொரு மனிதாபிமானப் பணியே.

போர் முடிந்தபோது வடக்கு கிழக்கில் பல இடங்கள் கண்ணிவெடி வயல்களாகக் காணப்பட்டன. குறிப்பாக கிளாலி முதல் வடமராட்சி கிழக்கு வரையான பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முன்னரங்கப் பகுதிகளாக இருந்த இடங்களில் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருந்தன. மிகச் சிக்கலான கண்ணிவெடிகள்கூட இங்கு காணப்பட்டிருந்தன. குறிப்பாக வெடிக்காத பல வெடிப்பொருள்களை அதாவது வெடிக்காத எறிகுண்டுகள் மற்றும் காலாவதியான கண்ணிவெடிகளை இணைந்துப் பொறிவெடிகள் தயார் செய்யப்பட்டிருந்தன. இவற்றை அகற்றுவது மிகச் சவாலான விடயமாக இருந்தது.

அப்படிப்பட்ட ஆபத்தான பணிகளில் ஈடுபட்ட சிலர் தமது இன்னுயிர்களை இழந்துள்ளனர். வேறு சிலர் தமது அவயவங்களைப்பறிகொடுத்துள்ளனர். அவர்கள் அனைவரும் இப்போது கட்டாயம் நினைகூரப்படவேண்டியவர்கள். நாம் நிம்மதியாக வாழ்வதற்காக தமது இன்னுயிர்களையும் உடல்நலத்தையும் அர்ப்பணித்த அவர்கள் உண்மையிலேயே தியாகிகள்தான். அவர்கள் மட்டுமல்ல கண்ணிவெடி அகற்றும் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட அனைவருமே மதிக்கப்படவேண்டியவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். ஆனாலும் அவர்களை, உண்மையான அந்த வீரர்களை இந்தச் சமூகம் கண்டுகொண்டதில்லை. அது வெறும் தொழில் என்ற ரீதியில் அதனைக் கடந்து சென்றுவிட்டது. அது தவறு. பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்திய அவர்களே உண்மையான வீரர்கள். அவர்களே போற்றுதலுக்குரியவர்கள்.

கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டத்தில் 3000க்கும் மேற்பட்டவர்கள் தமது உடல் உழைப்பைச் செலுத்தி இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் மதிப்புக்குரியவர்களே. 2002ஆம் ஆண்டு முதல் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் தொடங்கப்பட்டாலும் இறுதிப் போரின்போது அது கைவிடப்பட்டு மீண்டும் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நேரடிப் பங்களிப்பை வழங்குகிறது மற்றும் அது இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவின் ஊடாகச் செய்யப்படுகிறது.

ஹலோ ட்ரஸ்ட் (HeloTrust) மற்றும் மக் (Mag) ஆகிய இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் டாஷ் (Dash) மற்றும் ஷாவ் (SHAF) ஆகிய இரண்டு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த அமைப்புக்களும் மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியன. வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதிக்கப்படவேண்டியன.

இந்த உன்னத மனிதாபிமானப் பணியை ஆற்றிய அனைவருக்கும் சிரம் தாழ்த்திய வணக்கங்கள்.



# அயர்லாந்து புதிய இளம் பிரதமர் டிக்டோக் புகழ் சைமன் ஹாரிஸ்

ஐங்கரன் விக்கினேஸ்வரா




சமூக ஊடகங்களில், குறிப்பாக டிக்டோக்கில் (‘Tik Tok) சைமன் ஹாரிஸின் திறமை உலகெங்கும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்துள்ளது. 92,000 பின் தொடர்பவர்கள் (followers) அவருக்கு உள்ளனர். 1.8 மில்லியன் (Like) விருப்புகுகள் பெற்றுள்ளார். அவரே அயர்லாந்து நாட்டின் புதிய இளம் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அயர்லாந்து அரசியலில் முக்கிய நபரான சைமன் ஹாரிஸ், முன்னைய லியோ வரட்கர் எதிர்பாராத விதமாக வெளியேறியதைத் தொடர்ந்து, அயர்லாந்தின் இளம் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார். 37 வயதாகும் சைமன் ஹாரிஸ், அயர்லாந்தின் இளம் பிரதமர் என்ற வரலாற்றை உருவாக்கி உள்ளார்.

### பிரதமராக கௌரவம்:

எனது வாழ்க்கையில் கிடைத்த மாபெரும் கௌரவம் என்று, புதிய பதவி குறித்து சைமன்




ஹாரிஸ் தெரிவித்துள்ளார். ஏப்ரல் சைமன் ஹாரிஸ் அயர்லாந்து நாட்டின் பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.

அவருக்கு பைன் கேயல் கூட்டணியின் கட்சிகள் ஹாரிஸ் தேர்வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இது குறித்து பைன் கேயல் கட்சியின் துணைத் தலைவரான சைமான் கோவனி கூறுகையில் மிகவும் சிறப்பான தேர்வு இது. மிகச்சிறந்த பங்களிப்பை கொடுத்துள்ளார் சைமன் ஹாரிஸ். எனவே அவரது தேர்வு மிகச் சரியானது என்று தெரிவித்தார்.

கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சைமன் ஹாரிஸ் பேசுகையில் அர்ப்பணிப்பு உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் மனிதநேயத்துடனும் நான் செயல்படுவேன். ஒரு கட்சித் தலைவராக மட்டுமல்லாமல் நாட்டின் தலைவராகவும் நான் மிகச் சிறந்த ஒரு பங்களிப்பை கொடுக்க திட்மிட்டுள்ளேன் என்று தெரிவித்தார்.

### போர் நிறுத்தம் காசாவில் அவசியம்:

சர்வதேச அளவில் ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து சைமன் ஹாரிஸ் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தவர். உக்ரைனுக்குள் புகுந்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவது சட்டவிரோதமானது கொடுமையானது என்று வர்ணித்துள்ளார். அதேபோல காசாவில் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு சைமன் ஹாரிஸ் கல்வி அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறை அமைச்சராகப் பொறுப்பில் இருந்தவர் குறிப்பாக கொரோனா காலத்தில் இவரது செயல்பாடுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வரவிருக்கும் பொதுத் தேர்தல்களில் தோல்வி அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ஆளும் ஃபைன் கேல் கட்சிக்கு ( Fine Gael party ) ஒரு முக்கியமான நேரத்தில் அவரது வேட்புமனு வந்துள்ளது, சின் ஃபெயின் ஒரு வலுவான போட்டியாளராக உருவெடுத்துள்ளது.

### ஊடக செல்வாக்குள்ள அரசியல்வாதி:

சைமன் ஹாரிஸ் 1986 இல் அயர்லாந்தின் விக்லோவில் பிறந்தார். அவர் டப்ளின் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் இதழியல் படித்தார். ஆனால் அரசியலில் ஒரு வாழ்க்கையைத் தொடர தனது பட்டப்படிப்பை முடிக்கும் முன்பே வெளியேறினார்.

ஃபைன் கேலின் உறுப்பினரான சைமன் ஹாரிஸ், கட்சியின் இளைஞர் பிரிவில் பட்டம் பெற்ற பின்னர், இளம் வயதிலிருந்தே அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். தனது இளங்கலை பட்டப்படிப்பை முடிக்கவில்லை என்றாலும், அவர் விரைவில் ஒரு அர்ப்பணிப்புள்ள அரசியல்வாதியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார், கட்சிக்குள் பல்வேறு பாத்திரங்களில் பணியாற்றினார்.

சைமன் ஹாரிஸ் 2016 முதல் 2020 நடுப்பகுதி வரை அயர்லாந்தின் சுகாதார அமைச்சராக பணியாற்றினார். கோவிட் -19 தொற்றுநோய்க்கான நாட்டினை நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

தற்போது உயர்கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் பதவியை வகிக்கும் அவர், இந்த பதவிகளில் அவரது பதவிக்காலம் அவரது தலைமைத்துவ திறன்கள் மற்றும் கொள்கை நிபுணத்துவத்தை வடிவமைத்துள்ளது.

சமூக ஊடகங்களில், குறிப்பாக டிக்டோக்கில் சைமன் ஹாரிஸின் திறமை குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்துள்ளது, 92,000 பின்தொடர்பவர்கள் மற்றும் அவரது ஈர்க்கக்கூடிய உள்ளடக்கத்திற்காக 1.8 மில்லியன் லைக்குகள்.

அவரது ஆன்லைன் இருப்பு அவரது தொடர்புடைய ஆளுமையைக் காட்டுகிறது மற்றும் அவரது அரசியல் நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கும் வாக்காளர்களுடன் ஈடுபடுவதற்கும் ஒரு தளத்தை வழங்குகிறது.

### பிரச்சார வியு ூகமும் சவால்களும்:

தனது இளமை மற்றும் புதிய முன்னோக்கை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம், போட்டி கட்சிகளிடமிருந்து அதிகரித்து வரும் போட்டிக்கு மத்தியில் வாக்காளர்களுக்கு ஃபைன் கேலின் முறையீட்டை புத்துயிர் பெறுவதை சைமன் ஹாரிஸ் நோக்கமாகக் கொண்டுள்ளார்.

அவரது பிரச்சாரம் நெருக்கடி நிர்வாகத்தில், குறிப்பாக தொற்றுநோய்களின் போது, அவரது சாதனையை வலியுறுத்தக்கூடும், அதே நேரத்தில் கட்சிக்குள் முக்கிய கொள்கை முன்னுரிமைகள் மற்றும் கவலைகளையும் நிவர்த்தி செய்கிறது.

சைமன் ஹாரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டால், அடுத்த பொதுத் தேர்தலில் ஃபைன் கேலை வழிநடத்தும் சவாலை எதிர்கொள்வார். கட்சி தற்போது கருத்துக் கணிப்புக்களில் சின் ஃபெயினை விட பின்தங்கியுள்ளது என்பது உணமையே.

(9ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

# திருமலை நகரில் 75 மில்லியன் ரூபாய் செலவில் மூன்று கிலோ மீற்றர் காப்பெட் வீதி அபிவிருத்தி





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகர சபை பிரிவுக்குப்பட்ட பகுதியில் சுமார் 75 மில்லியன் ஷரூபா செலவில் 3 கிலோ மீற்றர் தூரம் கொண்ட காபட் இடும் பணி இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பின் கீழ் இப் பாதை அபிவிருத்தி பணி இடம்பெற்றது.

திருகோணமலையில் இயங்கிவரும் பிரகாஷ் ஒப்பந்தகாரர் இதனை அமுல்படுத்தி வருகிறது. இதில் மூர் வீதி, வித்தியாலயம் வீதி

, வித்தியாலயம் ஒழுங்கை, கல்லூரி வீதி ,சாரதா வீதி, அவ்வையார் வீதி உட்பட ஒவ்வொரு வீதியும் தலா ஒரு கிலோ மீற்றர் வரை மொத்தமாக 3 கிலோ மீற்றர் தூரம் வரை காபட் இடும் பணியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான வீதி அபிவிருத்தி வீதிகள் கொரியா, சீனா போன்ற நாடுகளின் கம்பெனிகளாலே இலங்கையில் மேற் கொள்ளப்பட்டது இன்று முதல் தடவையாக திருகோணமலையை சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்தினால் இந்த பாதையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் குழுவின் கண்காணிப்பின் கீழ் திறம்பட செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(05)

# வீடொன்றில் இரு சடலங்கள் உடப்புஸ்ஸலாவையில் மீட்பு



உடப்புஸ்ஸலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்ல பாஹலகம பகுதியில் வீடொன்றில் இருந்து இரு சடலங்கள் சனிக்கிழமை காலை மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

42 வயதான மூன்று பிள்ளைகளின் தாய் மற்றும் 39 வயதுடைய திருமணமாகாத ஆண் ஆகிய இருவரே வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து வரும் உடப்புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ள மூன்று பிள்ளைகளின் தாயிற்கும், இவருடன் உயிரிழந்த திருமணமாகாத ஆணுக்கும் தகாத உறவு இருந்து வந்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதேநேரத்தில் இவ் இருவருக்குமிடையில் இருந்து வந்த தகாத உறவு பெண்ணின் கணவருக்கு தெரிய வந்து கடந்த 4 ஆம் திகதி மாலை சண்டை இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து குறித்த தாய் தனது வீட்டை விட்டு தகாத உறவை பேணி வந்த நபருடன் சென்றுள்ள நிலையில், இந்த இருவரும் வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் இந்த சம்பவம் குறித்து வலப்பனை நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், சம்பவ இடத்திற்கு நீதிவான் வருகை தந்து பார்வையிட்டு மரண விசாரணை நடத்திய பின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்களா அல்லது கொலை செய்யப்பட்டனரா என்ற கோணத்தில் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Korthu Rorty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir



சம்மாந்துறையில்

# 2019 உயர்தர பிரிவின் 1ஆவது இப்தார் நிகழ்வு

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை 2019 உயர்தரப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இஃப்தார் நிகழ்வு சனிக்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 2019 க.பொ.த.(சா.தர) பரீட்சைக்கு தோற்றியவர்களும் 2022 க.பொ.த.(உ.தர) பரீட்சைக்கு தோற்றியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வை அல் ஹாபில் ராஷித் கிராத் ஓதி ஆரம்பித்து வைத்ததுடன் தலைமை உரையை மகாஷினுல் ஹாதிக் நிகழ்த்தியத்துடன் நிகழ்வை அறிவிப்பாளர் ஹஷான் தொகுத்து வழங்கி இருந்தார்.

இந் நிகழ்வுக்கு குறிப்பாக வெளியூரில் தங்களது உயர்கல்வியை தொடர்கின்ற பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தந்தையின் கத்திக்குத்துக்கு இலக்காகி 20 வயது மகளும் 18 வயது மகனும் காயம்

தந்தையின் கத்திக்குத்துக்கு இலக்காகிக் காயமடைந்த இரு பிள்ளைகள் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஹிங்குராங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

உதானகம பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதியும் 18 வயதுடைய இளைஞருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

சந்தேக நபரின் மனைவி வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்று சென்றுள்ள நிலையில் பிள்ளைகள் இருவரும் தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி இரவு சந்தேக நபரான தந்தை, தனது மகளின் நகையை கேட்டுள்ள நிலையில், இது தொடர்பில் தந்தைக்கும் மகளுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு முற்றியதில் தந்தை, தனது இரு பிள்ளைகளையும் கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளபப் எனப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இரு பிள்ளைகளில் மகளின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான தந்தை கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலை பிரசவ அறையில் தந்தைக்கும் அனுமதி



கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலையில் பிரசவத்தின்போது தாயிற்கு தந்தை துணைக்கு இருக்க அனுமதிக்கும் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த திட்டம் அரசாங்க வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்துவது இதுவே முதல் முறையாகும்.

அதன்படி, பிரசவத்திற்கு ஒவ்வொரு தாய்க்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தினூடாக தாய்மார்களுக்கு ஏற்ற சூழலில் குழந்தை பிறக்க வழிவகுப்பதோடு, பிரசவத்தின்போது தந்தை துணையாக இருக்க வாய்ப்பளிக்கிறது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## நாமல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கேள்வி - உங்களின் தாய் கட்சியான ஸ்சுதந்திர கட்சியில் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. உங்களின் அரசியல் அந்த கட்சியின் இருந்து ஆரம்பமானது. ஆகவே கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில் - சுதந்திரக் கட்சியில் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. பிரச்சினைகளுக்கு பேச்சு ஊடாக வெகுவிரைவில் தீர்வு காணப்பட வேண்டும்.

கேள்வி—உங்களின் பங்காளிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளார்களே... அது உங்களுக்கு சவாலாக அமையாதா?

பதில்–சவால் ஏதுமில்லை. தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அரசியல் கூட்டணிகள் ஸ்தாபிக்கப்படுவது இயல்பானதே.

கேள்வி – ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளாரே?

பதில் – அது அவரது நிலைப்பாடு. நாங்கள் எமது வேட்பாளரை அறிவிப்போம். கட்சியின் நிறைவேற்று சபை ஊடாக சிறந்த தீர்மானத்தை எடுப்போம்.

கேள்வி - நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப் போகின்றீர்களா?

பதில் - ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் உள்ளது.

கேள்வி – புத்தாண்டு தொடர்பில் மக்களுக்கு ஏதேனும் குறிப்பிட விரும்புகின்றீர்களா?

பதில் - அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். மகிழ்வுடன் புத்தாண்டை கொண்டாட வேண்டும் – என்றார் மகிந்த ராஜபக்ச.

## சாந்தனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் நினைவுரைகள், சிறப்புரைகள் மற்றும் சாந்தன் எழுதிய நூல் தொடர்பான உரைகளும் இடம்பெற்றன.

அத்தோடு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் ஈ.சரவணவன், ஆறு திருமுருகன், சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன், பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், தவத்தாரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நெத்தலியாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

30அடி ஆழத்தில் இருந்த ஆற்றுப்பகுதி மண் அகழ்வு காரணமாக 50அடிக்கும் மேலாக ஆழத்திற்குச் சென்றுவிட்டதாக அவர்கள் கூறுகின்றனர். அருகில் உள்ள வயல் நிலங்கள் இடிந்து விழுவதாகவும் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பல தடைவைகள் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடமும் தர்மபுரம் பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும தெரிவித்த அவர்கள் தமக்கான வாழ்வாதாரமாகத் திகழும் நெத்தலியாற்றை பாதுகாத்துத் தருமாறு கோரிக்கைவிடுக்கின்றனர்.




# வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற தமிழ் மாமன்றத் தமிழ்மாருதம் விழா







வவுனியா தமிழ் மாமன்றத்தின் தமிழ் மாருதம் விழா பண்பாட்டு ஊர்வலத்துடன் சிறப்பாக இடம்பெற்றது.

இருநாள் நிகழ்வுகளாக ஆரம்பமான தமிழ் மாருதம் பண்பாட்டு விழா சனிக்கிழமை மாலை 03.00 மணிக்கு வவுனியா விபுலானந்தர் சிலை முன்பிருந்து ஆரம்பமாகிய பண்பாட்டு ஊர்வலம் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தை வந்தடைந்தது, அங்கு முதல் நாள் நிகழ்வுகள் நடைபெற்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரண்டாம் நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

தமிழ் மக்களின் வாழ்வியலுடன் இணைந்த கலை நிகழ்வுகள், நடனம், நாட்டியம், இசை, நாடகம், விவாதம், சுழலும் சொற்போர், கவியரங்கு, வரலாற்று நாடகம் என பல்துறை சார்ந்த விடயங்களை உள்ளடக்கி நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், புத்தக கண்காட்சியும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, கல்வியியலாளர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலாமன்றங்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)

## மலைநாட்டுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை கண்டி பாரம்பரிய நடன கலைஞர்களைச் சந்தித்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇதனைக்குறிப்பிட்டார்.

கண்டியின் பாரம்பரிய நடனக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து ஆராயுமாறும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க, ஆலோசனை வழங்கினார்.

மலைநாட்டு நடனக்கலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபல்யமடைந்துள்ள போதிலும் பாரம்பரியமரபுகளைபின்பற்றாமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, புதிய குழு அதனை ஆராய்ந்து பொருத்தமான முறையைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சப்ரகமுவ நடனம் போன்ற இந்நாட்டின் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதன்முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றி அனைத்து மக்களுக்கும்நல்லதொருநாட்டைக் கட்டியெழுப்பஜனாதிபதி ரணில்விக் ரமசிங்கவினால் முன்னெடுக் கப்பட்டவேலைத்திட்டத்திற்கு கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்கள் தமது பாராட்டைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில்அமைச்சர் மனுஷ நாணயக்கார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# அயர்லாந்து புதிய இளம் பிரதமர்......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஃபைன் கேல், பியன்னா ஃபெயில் மற்றும் பசுமைக் கட்சிக்கு இடையிலான சுழற்சி ஒப்பந்தத்தின் கீழ் 2020 இல் உருவாக்கப்பட்ட அயர்லாந்தின் கூட்டணி அரசாங்கத்தின் சிக்கல்களையும் அவர் வழிநடத்த வேண்டும். சைமன் ஹாரிஸ் சமூக ஊடகங்களில், குறிப்பாக டிக்டோக்கில் செயலில் இருப்பதற்காக அறியப்படுகிறார்.

அங்கு அவருக்கு 92,000 பின்தொடர்பவர்கள் மற்றும் அவரது வீடியோக்களில் 1.8 மில்லியன் லைக்குகள் உள்ளன.

அயர்லாந்தில் கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்குவதற்கான வெற்றிகரமான 2018 வாக்கெடுப்பு பிரச்சாரத்தில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

சைமன் ஹாரிஸ் தேர்ந்தெடுக்கப் பட்டால், 2017 இல் முதன்முதலில் பதவியேற்றபோது 38 வயதான அயர்லாந்தின் மிக இளைய பிரதமராக லியோ வரட்கரை விஞ்சுவார்.

சைமன் ஹாரிஸ், தனது இளமை மற்றும் அரசியல் புத்திசாலித்தனத்துடன், ஐரிஷ் அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இது ஃபைன் கேல் மற்றும் அயர்லாந்தை எதிர்காலத்திற்கு வழிநடத்த தயாராக உள்ளது.

**இளம் வயது பிரதமர்:**

இதுவரை பிரதமராக இருந்து வந்தவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த லியோ வரட்கர் பதவி விலகியதைத் தொடர்ந்து சைமன் ஹாரிஸ் புதிய பிரதமராகியுள்ளார்.

லியோ வரட்கரின் தந்தை பெயர் அசோக் வரட்கர். இவர் மும்பையைச் சேர்ந்தவர் இளம் வயதிலேயே அயர்லாந்தில் குடியேறியவர். அங்கு திருமணமும் செய்து கொண்டு அயர்லாந்திலேயே குடியுரிமை பெற்று விட்டார்.

அத்துடன் ஓரினச்சேர்க்கைக்கு ஆதரவாக பகிரங்கமாக கருத்து தெரிவித்தவர் வரட்கர் என்பது குறிப்பிடத்தக்கது. அயர்லாந்தில் பைன் கேயல் கட்சி (குனைெ புயநடியசவல) தலைமையிலான கூட்டணிதான் ஆட்சியில் உள்ளது. பைன் கேயல் கட்சியின் தலைவராக இருப்பவர்தான் பிரதமர் பதவியிலும் இருப்பார்.

இதுவரை லியோ வரட்கர் கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் இருந்தார். இரு பதவிகளையும் அவர் ராஜினாமா செய்துள்ளதால் புதிய தலைவராக சைமன் ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சைமன் ஹாரிஸ், சமூக ஊடக செல்வாக்கை ஈர்ப்பதுடன், தற்போது அயர்லாந்து நாட்டின் தலைவராக - அதாவது பிரதமராக பதவியேற்கவுள்ளார் 37 வயதேயானா சைமன் ஹாரிஸ் (Simon Harris). இவர்தான் அயர்லாந்து நாட்டின் பிரதமர் பதவியை ஏற்கவுள்ள மிகவும் இளம் வயது தலைவர் ஆவார்.

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அது அவர்களின் நிலைப்பாடு.

ஆனால் தமிழ் சமூகமாகிய நாங்களும், எங்களை பலப்படுத்த வேண்டிய காலப்பகுதி இதுவாகும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 1949ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வினை நோக்கி செயற்பட்டுக்கொண்டு வருகின்றது. அதற்காக நாங்கள் மக்களுக்குக் காட்டும் வழியிலே மக்கள் நின்று செயற்பட்டால்எமதுபிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு அது ஒரு சந்தர்ப்பமாக அமையும். எனவே, நாங்கள் அனைவரும் ஒரே அணியாக நின்று செயற்பட்டால் நாங்கள்தான் இந்த நட்டில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும்சக்தியாக இருப்போம் என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் சாதனையாளர்களுக்கானநினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# உலமாக்களை நினைவுகூருதலும் வருடாந்த இஃப்தார் வைபவமும்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅஹ் உலமா சபை ஏற்பாடு செய்த மர்ஹூம்களான உலமாக்களை நினைவு கூரலும், வருடாந்த இஃப்தார் வைபவமும் உலமா சபை தலைவர் மௌலவி ரி.எம்.ஏ. ஜலீல் (பாஹவி) தலைமையில் கல்முனை முஹையத்தீன் ஜு/ம்ஆ பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்முனை அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅஹ் உலமா சபை செயலாளர் மௌலவி ஏ.எல்.எம். நாஸர் (மன்பயீ) அவர்களின் நெறிப்படுத்தலில் காலமான உலமாக்களுக்கான நினைவுரையும், துஆ பிரார்த்தனையும், மார்க்க சொற்பொழிவும் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த மௌலானா மௌலவி அஸ்ஸெய்யிது மசூர் தங்கள், மௌலானா மௌலவி அஸ்ஸெய்யிது ஹிபத்துல்லாஹ் தங்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ. ஜவாத், கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை முஹையத்தீன் ஜு/ம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், மதரஸாக்கள் மற்றும் கலாபீடங்களின் பிரதானிகள், சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(05)

# ரஹ்மத் பவுண்டேசனால் றமழான் அன்பளிப்புகள் சம்மாந்துறையில்





(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித றமழான் மாதத்தை முன்னிட்டு கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அமைப்பு அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் நோன்பு திறக்கும் இப்தார் ஏற்பாடுகளையும் மனிதாபிமான உதவிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.எம்.நிலுபா மற்றும் எஸ்.நளீம் ஆகியோர் மூலம் சம்மாந்துறையின் சில கிராமங்களில் அடையாளப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு சனிக்கிழமை இந்த அமைப்பால் பேரீச்சம்பழப் பொதிகள் வழங்கி வைப்பட்டுள்ளன.

பவுண்டேசன் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை மத்திய குழுச் செயலாளரும் திடீர் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தருமான ஏ.எஸ்.எம். அஸாருதீன் உட்பட நலன் விரும்பிகள், பயானாளிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(05)

## தேசிய மட்டத்தில் சாதனை படைத்த அனபாவிற்கு பாடசாலையில் வரவேற்பு

சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்

தேசிய மாணவர் நாடாளுமன்றத்தில் 'பௌதீக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ' அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட எம். அனபாவிற்கு கமுஃஅக்ஃ கரடிக்குளம் றஹுமானியா வித்தியாலயத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இதன் போது அதிபர் கருத்து தெரிவிக்கையில் -

இந்த வெற்றி மூலம் நமது பாடசாலை எதிர் காலத்தில் சர்வதேச மட்டத்தில் செல்ல வேண்டும். அதற்காக எதிர் காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தொடர்ந்து கருத்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் கே.எம். முனாஸ் , பிரதி அதிபர் ஏ.எல். அன்சார் ,உப அதிபர் யு.ஏ. இப்றாஹிம், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் ஏ.எச். இம்றான் ஹுஸைன் (பொறுப்பாசிரியர்) , மாணவியின் தந்தை ஏ.எல். மஹ்ஷூப், பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க பிரதி நிதிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(05)

## உப்புவெளியில் விபத்து

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் 5ஆம் கட்டை பகுதியில் வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் சீனக்குடாவை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் (வயது 35) ஆவார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

# அநுரவின் உரையில் நம்பிக்கை இல்லை

## சிறிதரன் தெரிவிப்பு

அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் தமிழர்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்று எதுவும் தென்படவில்லை எனவும், மாறாக ஏனைய சிங்களத் தலைவர்களை விடவும் தமிழர் நலன்கள் தொடர்பான மிகக் குறைந்தளவிலான கரிசனையுடனேயே அவர் பேசியிருக்கின்றார் எனவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். சிறிதரன் விசனம் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வட மாகாண மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, 'எமக்கு வாக்களியுங்கள் என்றோ, 13 பிளஸ் தருகின்றோம் அல்லது சமஷ்டியை தருகின்றோம் - எமக்கு வாக்களியுங்கள் என்றோ கூறுவதற்காக நான் இங்கு வரிவல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பிரதேச பேதங்களும், இன, மதபேதங்களுமின்றி நாம் அனைவரும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணையவேண்டும். நாட்டை புதியதொரு பாதையில் கொண்டுசெல்லவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு வடக்கின் அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்' என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எஸ்.சிறிதரன், அநுரகுமார திஸாநாயக்கவின் உரையில் தமிழர்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்று எதுவும் தென்படவில்லை எனவும், மாறாக, ஏனைய சிங்களத் தலைவர்களை விடவும் தமிழர் நலன்கள் தொடர்பான மிகக் குறைந்தளவிலான கரிசனையுடனேயே அவர் பேசியிருக்கின்றார் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று யுத்தம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் சுமார் 40,000 இராணுவ வீரர்களை இணைத்தமை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிப்பதில் முன்னின்று செயற்பட்டமை, யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது அது தொடர்பாகக் குறைந்தபட்சம் அனுதாபம் கூட வெளியிடாமை போன்ற பல்வேறு பிரச்சினைக்குரிய விடயங்கள் அநுரகுமார திஸாநாயக்க தரப்பில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மைய காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த பிக்குகளின் பங்கேற்புடன் இடம்பெற்றுவரும் அத்துமீறல்கள் தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க ஒருமுறைகூட கண்டனத்தை வெளிப்படுத்தவில்லை எனக் குறிப்பிட்ட சிறிதரன், இன மதவாதமற்ற, அனைத்து மக்களுக்குமான சிறந்த தலைவர் என்ற ரீதியில் அநுரகுமார திஸாநாயக்க முதலில் தன்னை முன்னிலைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும், 13 ஆவது திருத்தம் அல்லது சமஷ்டி முறையிலான தீர்வு குறித்து எவ்வித உத்தரவாதத்தையும் வழங்குவதற்கு தான் வரவில்லை என்று கூறுபவருக்கு தமிழ் மக்கள் எந்த அடிப்படையில் வாக்களிப்பார்கள் என்று கேள்வி எழுப்பிய சிறிதரன், அநுரகுமார திஸாநாயக்க தமிழர்களிடத்தில் மாத்திரமன்றி, சிங்கள மக்கள் மத்தியிலேயே இன்னமும் தன்னை ஒரு சிறந்த தலைவனாக காண்பிக்கவில்லை. - என்றார்.

(05)

# புதுவருட விளையாட்டு நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்



மலர இருக்கும் 2024 ஆம் ஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் வன்னிப் படைத்தலைமையகம், 59 ஆவது படையணி, 64 ஆவது படையணி, முல்லைத்தீவு மாவட்ட செயலகம் இணைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முல்லைத்தீவு மாவட்டம், மாமூலை டைமன் விளையாட்டு மைதானத்தில் காலை 9.00 மணியளவில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ப்ரமித்த பண்டார தென்னக்கோன் கலந்து சிறப்பித்ததுடன் நிகழ்வை ஆரம்பித்தும் வைத்தார்.

சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை பேணும் நோக்கில் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேயின் எண்ணத்திலும் வழிப்படுத்தலிலும் இந்த நிகழ்வு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சித்திரைப் புத்தாண்டின் பண்பாட்டு விழுமியங்களை மாதிரி வடியில் உருவாக்கியிருந்ததுடன் ஆற்றுகையையும் நிகத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் , மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.ஜெயகாந்த், வன்னி படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் தினேஸ் நாணயக்கார, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ம.உமாமகள், 59 ஆவது படையணியில் தளபதி, 64 ஆவது படையணியின் தளபதி, மதகுருமார்கள், இராணுவ அதிகாரிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(05 - 113)

# குடுவில் அரபா நகர் வீடுகளுக்கு சூரியசக்தி மின் இணைப்பு வசதி

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம், குடுவில் அரபா நகர் கிராமத்தில் மின்சார வசதி இல்லாமல் மிக நீண்ட காலமாக பல்வேறு சிரமங்கள் உடன் வாழ்ந்து வந்த சுமார் 35 குடும்பங்களுக்கு தனவந்தர்களால் சூரிய சக்தி மின் இணைப்பு வழங்கப்பட்டது.

35 குடும்பங்களுக்கு மின் இணைப்பை உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சமூக செயற்பாட்டாளர் எஸ்.எம்.சன்சீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகீலா இஸ்ஸதீன் மற்றும் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஷ்ஷான் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு மின் இணைப்பை வழங்கி வைத்தனர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், இறக்காமம் பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஜஃபர், கிராம உத்தியோகத்தர்களான ஏ.சீ. எம்.சமீர், எம்.ஜே.எம்.அதீக், சமூக சேவையாளர் ஜிப்ரி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரையாற்றுகையில், அடிப்படை வசதிகளின்றி மிகவும் கஷ்டத்துடன் வாழும் இக்கிராம மக்களின் நலன் கருதி தனவந்தர்கள் முன்வந்து மின்சார வசதியை ஏற்படுத்தி கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இங்குள்ள மக்கள் கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களின் சுகாதார ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இக்கிராமத்தில் மருத்துவ முகாம்களை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வேன் எனத் தெரிவித்தார்.

(05)

# மக்கள் கோரிக்கையை நிராகரிக்க முடியாது

## சந்திரகுமார் திட்டவட்டம்



தாங்கள் காலம் காலமாக வாழ்ந்த பூர்வீக நிலங்கள் பாதிக்கப்பட்டு தங்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டு மக்களுக்கும் பிரதேசத்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் முதலீட்டு முயற்சிகளை தங்களது பிரதேசத்துக்குள் அனுமதிக்காதீர்கள் என்ற பொன்னாவெளி மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஒருபோதும் நிராகரிக்க முடியாது. அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை சமத்துவக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பொன்னாவெளியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பொன்னாவெளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வு காரணமாக அப்பிரதேசத்தில் ஐந்துக்கு மேற்பட்ட கிராமங்கள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்படும்.

100 மீற்றருக்கு மேல் ஆழத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வு காரணமாக அந்த பிரதேசம் முழுவதும் உவராக மாறிவிடும். இதனால் காலம் காலமாக பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் தங்களின் சொந்த நிலத்தை விட்டு வெளியேறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உருவாகும். எனவே, தங்களது பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வு நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என அம்மக்கள் தெரிவிப்பதில் எவ்வித தவறும் இல்லை.

அந்த மக்கள் இன்றைக்கு 270 நாள்களைக் கடந்து அமைதி வழியில் தங்களது நிலத்தைப் பாதுகாக்க போராடி வருகின்றார்கள். எனவே அவர்களின் நியாயமான போராட்டத்தை மதித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, வன்முறைகளை தூண்டிவிடும் வகையில் வெளி பிரதேசங்களிலிருந்து மக்களை அழைத்துச் சென்று இனத்துக்குள்ளே மோதவிட்டு அதில் தங்களின் சுயலாபங்களை நிறைவேற்றிக்கொள்ளும் மிக மோசமான நடவடிக்கைகளை மக்களோடு நின்று சமத்துவக் கட்சியும் வன்மையாக கண்டிக்கிறது.

மேலும், பொன்னாவெளி மக்களோடு நாம் தொடர்ந்தும் நிற்போம். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை குரல் கொடுப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# கல்மடு நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு





முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்குமான மையப்பகுதியில் உள்ள கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவிற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்குமான எல்லைப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் தமது விவசாயத்தை அழித்து வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறை வைத்து காலபோகம் சிறுபோகம் செய்து வரும் விவசாயிகளின் விவசாய நிலங்களில் சட்டவிரோதமாக மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

30 அடி ஆழத்தில் இருந்த ஆற்றுப்பகுதி தற்பொழுது 50 அடிக்கும் மேலாக மணல் அகழ்வால் பாதிப்படைந்துள்ளது இதனால அருகில் உள்ள வயல் நிலங்கள் இடிந்து விழுவதாகவும் தமது விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பல தடைவைகள் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடமும் தர்மபுர பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தமக்கான வாழ்வாதார நிலங்களை பாதுகாத்து தருமாறு கேட்டு நிற்கின்றனர்.

(05 - 113)

# வவுனியாவில் 29 விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கி வைப்பு



கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியாவில் 29 விசாயிகளுக்கு தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

நீர்பாசன அமைச்சின் கீழ் உள்ள குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பயிற் செய்கைக்கான தானியங்கள் வழங்கும் வேலைத் திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிற் செய்கைக்காக கச்சான், கௌப்பி, பயறு, உழுந்து என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள 25 விவசாயிகளுக்கு விதைக் கச்சானும், 2 விவசாயிகளுக்கு கௌப்பி விதைகளும், ஒரு விவசாயிக்கு உழுந்து விதைகளும், மற்றும் ஒரு விவசாயிக்கு பயறு விதைகளும் என 29 விவசாயிகளுக்கு விதைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பயிற் செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி இரத்தினம் காஞ்சனா, கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05 - 100 )

காலைக்கதிர் Kalaikkathir

## வவுனியாவில் தரம் 2 மாணவன் மீது தாக்குதல் நடத்திய ஆசிரியை கைது





வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் குறித்த பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார் என ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை முடிந்து வீட்டிற்கு சென்ற நிலையில் மாணவனின் முகத்திலும், தலையிலும் அடிகாயங்கள் காணப்பட்டதை அடுத்து பெற்றோர் மாணவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியை தாக்கினார் எனத் தெரிவித்துள்ளான்.

இதனைத் தொடர்ந்து சிறுவனின் தந்தை குறித்த ஆசிரியருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சிறுவனை தாக்கியதற்கான காரணம் என்ன மற்றும் காலிற்கு கீழ் அடித்து இருக்கலாமே என்றும் தெரிவித்துள்ளார். இதற்கு பதில் அளித்த ஆசிரியை ‘உங்கள் மகனுக்கு அ, ஆ தெரியவில்லை என்றும் அதனாலேயே அடித்தார் என்றும் அடிக்கும் போது சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் அடிபட்டு விட்டது என்று கூறியதுடன், மகனுக்கு அடிக்காமல் கொஞ்சுவதா என ஆசிரியர் கேட்டுள்ளார்.

கோபமடைந்த பெற்றோர் காயமடைந்த மாணவனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை வழங்கியதுடன், பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தனர்.

இந்நிலையில் தாக்குதல் இடம்பெற்று நான்கு நாள்களின் பின் வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸார் நேற்று (செவ்வாய்க்கிழமை) குறித்த ஆசிரியரை கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் அந்த ஆசிரியரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இச் சம்பவம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவினர், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினர், வட மாகாண கல்வி திணைக்களத்தினர், வவுனியா வடக்கு கல்வி வலயத்தினர் ஆகியோரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05 - 100)

# சவால்களிலிருந்து கட்சியை மீட்டெடுப்பதே எமது இலக்கு

### மாவை சேனாதிராசா திடசங்கற்பம்



தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் உள்ளிட்ட கட்சிக்கு எதிரான அனைத்து சவால்களில் இருந்தும் அதனை மீட்டெடுப்பதை இலக்காகக்கொண்டே பயணிக்கின்றோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா சூளுரைத்துள்ளார்.

அத்துடன், முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னதாக கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுடன் கலந்தாராய்வதற்கு முடிவெடுத்துள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். இதுதொடர்பில் மாவை.சோ. சேனாதிராசா தெரிவிக்கையில் -

ஆரம்பத்திலிருந்து கட்சியினை ஒற்றுமையை நான் வலியுறுத்தி வருவதோடு கட்சியின் பதவி நிலைகளுக்காக போட்டியிடுவதால் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்து வருகின்றேன்.

இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தெரிவுகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் சில அங்கத்தவர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்குகளை நாம் ஒற்றுமையாக முகங்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

தற்போதைய சூழலில் நீதிமன்ற வழக்குகளில் இருந்து கட்சியை விடுவிக்க வேண்டியுள்ளது. அத்துடன் தெரிவுகளில் குழப்ப நிலைமைகள் காணப்படுவதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டினால் அதுதொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

மேலும் ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கட்சியின் தலைவர் தெரிவு ஏனைய பதவி நிலைகளுக்கான தெரிவுகள் ஆகியவற்றில் கருத்து ரீதியான முரண்பாடுகளே காணப்பட்டனவே தவிர, யாப்புக்கு எதிரான எவ்விதமான செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. எனினும், உறுப்பினர்களில் சிலர் திருப்தி இன்மையால் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். அதேநேரம், கட்சியில் இணைந்து மத்திய குழுவிலும் பொதுச்சபையிலும் அங்கத்துவத்தைப் பெற்றவர்களில் சிலருக்கு வாக்களிப்பதற்கான அறிவிப்பு முறையாக விடுக்கப்பட்டிருக்கவில்லை.

அதனால், தலைமைக்கான வேட்பாளர்களின் அங்கீகாரத்துடன் அவர்களை வாக்களிப்பில் கலந்துகொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், தொகுதிக்கிளைகளின் அங்கத்துவங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்ற திருத்தமும் 2011 ஆம் ஆண்டி மேற்கொள்ளப்பட்டு தேர்தல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டும் உள்ளது.

ஆகவே, கட்சியின் செயற்பாடுகள் யாப்பு அமைப்பு விதிகளுக்கு எதிரானவையாக அமையவில்லை என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் நீதிமன்ற வழக்கு உட்பட கட்சிக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை முறியடித்து அனைத்து சவால்களில் இருந்தும் மீள்வதே எமது இலக்காகும். விசேடமாக, கட்சியை ஒற்றுமையாகவும் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் பயணிக்கச் செய்வதற்கான கடுமையான பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கட்சியின் மத்திய குழு அங்கத்தவர்களை அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னதாக சந்தித்து கலந்தராய்வில் ஈடுபடவுள்ளேன். மேலும் தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியை மக்களுக்காக வினைத்திறனுடன் தொடர்ந்தும் இணக்குவதற்கான அனைத்து தரப்பினரினதும் ஏகோபித்த ஆதரவையும் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. - என்றார். (05)




# மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்கா இப்தார் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீ லங்கா அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு அமைப்பின் பணிப்பாளர் எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் மாளிகைக்காடு பாவா றோயல் மண்டபத்தில் இடம்பெற்றது.

நோன்பின் மாண்புகள், சமூக நல்லிணக்கம், சகோரத்துவம், இஸ்லாம் வலியுறுத்தும் வாழ்வியல் தொடர்பில் தாருசபா பிரதானி மௌலவி உஸ்தாத் சபா முஹம்மது (நஜாயி) மார்க்க சொற்பொழிவை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், தேசிய மாணவர் சிப்பாய்கள் படையணி 17 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி எஸ்.பி திஸாநாயக்க, கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என்.ஹுதா, கிழக்கின் கேடய தலைவர் எஸ்.எம். சபீஸ், மேஜர் கே.எம். தமீம், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஐ.எல்.எம். இர்பான், பயிற்சி அதிகாரி கெப்டன் எம்.டி. நௌஷாட், சாய்ந்தமருது இளைஞர் சேவை பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி எ. ஹமீர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் உரையாற்றுகையில் -

சமூகத்தின் உணர்வு ரீதியான ஒரு நிலைப்பாடு, மனிதர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு போன்ற பல கருத்துக்களை முன்வைத்தார். அமைப்பின் நிர்வாக செயலாளர் டப்லியூ. ஷவ்தப் உசைம் இந்நிகழ்வை நெறிப்படுத்தினார்.

(05)

# ஈஸ்டர் படுகொலை குறித்த பிள்ளையானின் நூல் அறிமுகம்

### திருகோணமலையில் சனிக்கிழமை நடந்தது







(ஹஸ்பர் ஏ.எச்)

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுறை சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை நூல் அறிமுக விழா சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆசிரியர் கு.நளினகாந்தன் தலைமையில் திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

நிகழ்வின் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் இ.நெடுஞ்செழியன் கலந்து சிறப்பித்தார். நூலின் முதல் பிரதியை திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத்தலைவர் துசியந்தன் முதன்மை அதிதிக்கு வழங்கி வெளியீட்டு வைத்தார்.

நூலின் நயவுரையை நிலாவெளியூர் ஜெகதர்மா வழங்கினார்.

நிகழ்வில் அரச உயர்அதிகாரிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.04.2024இல் வெளியிடப்பெற்றது